பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 21 வெள்ளிக்கிழமை 04.02.2022 கதிர் 317

## திருநெல்வேலி சந்தையில்
# திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., திருநெல்வேலி சந்தையில் வியாபாரிகள் மற்றும் நுகர்வோர்களிடம் திருட்டு மற்றும் கொள்ளையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். ☞2

# கடலில் இறங்கிப் போராடும் மீனவர்கள்!



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

வீதியில் இறங்கிப் போராட நீதிமன்றம் தடை விதித்துள்ள நிலையில், பருத்தித்துறை - சுப்பர்மடம் மீனவர்கள் இன்று கடலில் இறங்கிப்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்தும், வடமராட்சி கிழக்கு மீனவர்கள் இருவர் இந்திய ☞2

# புதுடில்லிக்கு பீரிஸ் பயணம்



இலங்கைவெளிவிவகாரஅமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் புதன்கிழமை வரை (6 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை) ☞2

# நீதி கோரி முள்ளிவாய்க்காலில் உறவுகள் இன்று அணிதிரள்வு!

## செல்வபுரத்தில் நிறைவுபெற்றது பேரணி



(ந.லோகதயாளன்)

'ஸ்ரீலங்காவின் சுதந்திர நாள் தமிழ்த் தேசத்தின் கரிநாள்' எனும் தொனிப்பொருளில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இருந்து ஆரம்பமான மாபெரும் பேரணி செல்வபுரத்தில் நிறைவு பெற்றது. ☞2

## பொறுப்புகளை மறந்துவிட்டு
# உரிமைகளைப் பற்றி மட்டும் இங்கும் பேசுவது உகந்ததல்ல
## சுதந்திர தின உரையில் கோட்டா



பெற்றுக்கொண்ட சுதந்திரத்தின் உயர்ந்தபட்ச பலனை அடைவதற்கு, அனைவரும் நாட்டுக்கான தமது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

சுதந்திரமானதும் ஜனநாயகமானதுமான நாட்டின் மக்களுக்கு அனைத்து உரிமைகளும் உள்ளன. அதுபோன்றே, பொறுப்புகளும் உள்ளன என்றும் எடுத்துரைத்த ஜனாதிபதி, அந்தப் பொறுப்புகளை மறந்து உரிமைகளை பற்றி மாத்திரம் பேசுவது உகந்ததல்ல என்றும் குறிப்பிட்டார்.

இன்று முற்பகல், கொழும்பு சுதந்திரச் சதுக்கத்தில் இடம்பெற்ற 74 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்டு தேசத்துக்காக ☞2

# வவுனியாவில் 18 பேர் மயக்கம்





(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மாணவிகள் உள்ளிட்ட 18 பேர் திடீரென மயங்கி விழுந்த நிலையில் முதலுதவிச் சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன. ☞2

## 'ஹபாயா' சர்ச்சை:
# இனப்பிரச்சினைக்கு வழிவகுக்கக்கூடாது!
## சம்பந்தன் வலியுறுத்து



திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் மீண்டும் எழுந்துள்ள 'ஹபாயா' சர்ச்சையால் அதிருப்தியடைந்துள்ள தமிழ்த் தேசியக் ☞2

# யாழிலும் உறவுகள் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையின் சுதந்திர தினமான இன்றைய நாளைக் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணத்தில் போராட்டம் இடம்பெற்றது. ☞2



# குருந்தூர்மலைக்கு விரைந்தது கூட்டமைப்பு

(ந.லோகதயாளன்)

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினமான இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

குறிப்பாக இவ்வாறு விஜம் மேற்கொண்டவர்கள் குருந்தூர் மலையில் நீதிமன்றக் கட்டளைக்கு முரணாகக் கட்டப்படுகின்ற கட்டடங்களைப் பார்வையிட்டதுடன், அங்கு ஆதி ஐயனார் திரிசூலம் இருந்த இடத்தில் வழிபாடுகளையும் மேற்கொண்டனர்.

இந்த விஜயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ☞2

# இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக உயர்நீதிமன்றம் செல்லத் தயாராகும் சுமந்திரன்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் மீனவர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார். ☞2



## வவுனியாவில் 18 ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் வவுனியா நகர சபை மைதானத்தில் இன்று காலை இடம்பெற்றது.

இதன்போது அணிவகுப்பில் ஈடுபட்ட பாடசாலை மாணவர்கள், சிவில் பாதுகாப்புப் படையினர், பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் பிரதான நிகழ்வு கொட்டகைக்கு முன்னால் மைதானத்தில் அணிவகுப்பு மரியாதை முடிந்த பின்னர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

சுமார் ஒரு ஒணித்தியாலத்துக்கு மேலாக குறித்த மாணவர்கள், இராணுவத்தினர், பொலிஸார், சிவில் பாதுகாப்புத் தரப்பினர் மைதானத்தில் நிறுத்தி வைக்கப்பட்டமையால் வெய்யில் தாக்கம் காரணமாக 13 மாணவர்களும், 5 சிவில் பாதுகாப்புப் படையினருமாக 18 பேர் மயக்கமடைந்தனர்.

அவர்களை உடனடியாக செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்கள் அழைத்துச் சென்று நோயாளர் அம்புலன்ஸில் வைத்து முதலுதவிச் சிகிச்சை வழங்கினர்.

பல மாணவர்கள் மயங்கி விழுவதை அவதானித்த நிகழ்வின் அதிதியாகக் கலந்துகொண்ட மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் வெய்யிலில் நின்ற மாணவர்களுடன் உரையாடி விட்டு உடனடியாக அம் மாணவர்களை அங்கிருந்து சென்ற பின் ஏனைய நிகழ்வுகளை நடத்துமாறு அரச அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

இதன் பின் மாணவர்கள், சிவில் பாதுகாப்புப் படையினர், பொலிஸார், இராணுவத்தினர் மைதானத்தில் இருந்து கலைந்து செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (100)

## குருந்தூர்மலைக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், இரா.சாணக்கியன், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுரேன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கி.சேயோன் ஆகியோருடன் பொதுமக்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய மீனவர்களின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை - சுப்பர்மடம் மீனவர்கள் ஐந்தாவது நாளாக இன்றும் தொடர்ச்சியாகத் தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

மீனவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், போராட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற சுமந்திரன் எம்.பி., மீனவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்ததுடன் அத்துமீறி நுழையும் மீனவர்களைக் கைதுசெய்வதற்குக் கடற்படையினருக்கு உத்தரவு விடக் கோரியும், 2017ஆம் ஆண்டின 11ஆம் இலக்க இழுவை மடி தடைச் சட்டம் மற்றும் வெளிநாட்டு படகுகளுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தும் 2018ஆம் ஆண்டின் முதலாம் இலக்க சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்த கோரியும் உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யவுள்ளார் எனவும், அதற்கு வடக்கு மீனவ சங்கங்களின் ஆதரவு வேண்டும் எனவும் மீனவர்கள் மத்தியில் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தும் விதமான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் தரப்புகளுக்கு தாம் எப்போதும் பூரண ஆதரவை வழங்குவோம் என மீனவர்கள் இதன்போது தெரிவித்தனர்.

## இனப்பிரச்சினைக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், இது இனப் பிரச்சினைக்கு வழிவகுக்கக்கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்பேசும் மக்கள் என்ற ரீதியில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டியது அத்தியாவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, ஒவ்வொரு இனத்தினுடைய உரிமைகளையும் மற்றைய இனம் மதிக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

'ஹபாயா' அணிந்து வந்திருந்த குறித்த முஸ்லிம் பெண் ஆசிரியர் உண்மையில் அதிபர் மீது தாக்குதல் நடத்தியிருந்தால் அது தவறான விடயம் எனவும், இந்தக் கருமத்தை நாம் சமாதானமாகத் தீர்க்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஒருவரையொருவர் மதித்து மற்றவர்களுடைய கருமத்துக்கு - சுயமரியாதைக்கு - இறைமைகளுக்குப் பாதகம் இல்லாமல் நாம் செயற்பட வேண்டும்.

அனைவரும் இந்தக் கடமையை ஒற்றுமையாகச் செய்ய வேண்டும் என நான் மிகத் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிரச்சினையை நாம் வளர்க்கக்கூடாது. தமிழ்பேசும் மக்கள் என்ற வகையில் வடக்கு - கிழக்கு என்பது எமது சரித்திர ரீதியான வதிவிடம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த அடிப்படையில் இறைமையை நாம் பாதுகாப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும் - என்றார்.

## யாழிலும் உறவுகள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி விசாரணையை நடத்து, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும், அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு போன்றவற்றை வலியுறுத்தி இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது போராட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பியவாறு யாழ்ப்பாணம் முனியப்பர் கோயில் பகுதி வரை பேரணியாகச் சென்றனர்.

## கடலில் இறங்கிப் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்களின் படகு மோதி உயிரிழந்த சம்பவத்துக்கு நீதி கோரியும் பருத்தித்துறை - சுப்பர்மடம் மீனவர்கள் ஐந்தாவது நாளாக இன்று போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சுப்பர்மடம் மீனவர்கள் கடந்த 31ஆம் திகதி முதல் பருத்தித்துறை - பொன்னாலை வீதியை வழிமறித்து நேற்று வரையில் நான்கு நாள்களாகத் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வந்திருந்தனர்.

அந்நிலையில், நேற்று குறித்த வீதியின் ஊடான போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளமை, பொதுமக்களின் இயல்வு வாழ்வுக்கு இடையூறு விளைவித்தல், கொரோனா அபாயம் உள்ளிட்டவற்றைச் சுட்டிக்காட்டி பருத்தித்துறைப் பொலிஸார், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் போராட்டத்துக்கு எதிராகத் தடை உத்தரவைப் பெற்றிருந்தனர்.

நீதிமன்றத் தடை உத்தரவை அடுத்து நேற்றிரவு மீனவர்கள் வீதி மறியல் போராட்டத்தைக் கைவிட்டனர்.

இந்நிலையில், இலங்கையின் சுதந்திர தினமான இன்றைய தினத்தைக் கரிநாளாக அனுஷ்டித்து மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னதாக கடந்த மாதம் 27ஆம் திகதி கடலுக்குச் சென்ற வத்திராயன் மீனவர்கள் இருவரும் உயிரிழந்த நிலையில் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும், இதுவரை காலமும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் உயிரிழந்த மீனவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து மெழுகு திரிகளை ஏந்தி, கறுப்புக் கொடிகளுடன் கடலில் இறங்கி மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

## புதுடில்லிக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுடில்லிக்கு விஜயம் செய்கின்றார்.

இதற்கிடையில், புதுடில்லிக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட நேற்று இந்தியப் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவாலை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

## திருட்டில் ஈடுபட்டு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருநெல்வேலி சந்தையில் வகுப்பு (மூடை தூக்குதல்) வேலை செய்து வரும் நபர் ஒருவர், வியாபாரிகள் , நுகர்வோர்களிடம் உங்கள் மூடைகளைத் தூக்கி வருகின்றனர் எனக் கூறி மூடைகளைத் தூக்கிச்செல்லும்போது, அவற்றில் இருந்து பொருள்களைத் திருடுதல், அதிக பணத்தை மிரட்டிப்பெறுதல், மூடைகளைவாகனத்தில் ஏற்றிவிடுவதாகக் கூறி மூடைகளை தூக்கிக்கொண்டுதலைமறைவாகுதல் போன்ற செயல்களில் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்துள்ளார்.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபையிடமும், கோப்பாய் பொலிஸாரிடமும் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ச்சியான முறைப்பாடுகளைச் செய்து வந்திருந்தனர்.

இந்நிலையில், இன்று காலை கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறித்த நபர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து அந்நபரைக் கைது செய்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்தனர்

## உரிமைகளைப் பற்றி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும்போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

நாட்டுக்கு முன்னால் காணப்படும் சவால்களை வெற்றிகொள்ள வேண்டுமாயின், அர்ப்பணிப்புகளின் ஊடாகவே அவை சாத்தியப்படும். கடினமான காலங்கள் எப்போதும் ஒரே மாதிரி இருப்பதில்லை. அவ்வாறான கடினமான காலங்களை எதிர்கொள்வதற்கு, பலம்மிக்க மனிதர்கள் அவசியம். நாம் தற்காலத்தில் முகங்கொடுத்துவரும் பிரச்சினைகள் அனைத்தும் நீண்டகாலப் பிரச்சினைகள் அல்ல. நேர்மறையான அணுகுமுறைகளுடன் அவ்வாறான பிரச்சினைகளுக்குப் பதிலளிக்க முடியும்.

நாடு தற்போது முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான காரணங்களைக் கண்டுபிடித்துக்கொண்டு பல வருடங்கள் பின்னோக்கிச் செல்வதை விட, அவற்றுக்கான நீண்டகால மற்றும் குறுகியகாலத் தீர்வுகளைக் காண்பதே காலோசிதமானது. அரசு தற்போது அதற்கான அவதானத்தையே செலுத்தியுள்ளது.

நாட்டுக்கு எடுத்துக்காட்டாக எப்போதும் செயற்படுமாறு அனைத்து அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அரசியல்வாதிகளிடமும் கேட்டுக்கொள்கின்றோம். நாட்டு மக்களுக்கு அந்த முன்னுதாரணத்தைக் காட்டும்போதே, பெரும்பாலான மக்கள் உங்களைப் பின்பற்றுவார்கள்.

வெற்றிகொள்ளப்பட்டுள்ள சுதந்திரத்தை எதிர்காலச் சந்ததியினருக்காகப் பாதுகாப்பேன். நாட்டின் ஒற்றுமை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையை நிலைநாட்டுவதாக வழங்கிய உறுதிமொழியை எப்போதும் காப்பேன்.

சுதந்திரத்தின் உண்மையான அர்த்தத்தை அடைந்த பெருமைமிக்க தேசத்தை உருவாக்குவதற்காக இணையுங்கள் என்று தேச பக்தியுள்ள மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

## நீதி கோரி முள்ளி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று முற்பகல் 11 மணிக்கு வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் மதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரும் பங்கேற்றனர்.

குறித்த பேரணிப் போராட்டம் வட்டுவாகல் பாலத்தை வந்தடைந்த போது, போராட்டாக்காரர்கள் தீப்பந்தங்களை ஏந்தியவாறு தமது குமுறல்களை வெளிப்படுத்தி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சர்வதேச விசாரணை வேண்டும், எமது கடல் எமக்கு வேண்டும், வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், எங்கே எங்கே உறவுகள் எங்கே?, குடும்பம் குடும்பமாகக் கையளிக்கப்பட்ட உறவுகள் எங்கே?, வைத்தியசாலைகளில் இருந்து காணாமல்போன உறவுகள் எங்கே?, முள்ளிவாய்காலில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட உறவுகள் எங்கே?, விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்ட உறவுகள் எங்கே?, குழந்தைகளோடு ஒப்படைக்கப்பட்ட உறவுகள் எங்கே?, இன அழிப்பும் கொடூர போரும் முடிந்த பிற்பாடு கையளிக்கப்பட்ட உறவுகள் எங்கே? போன்ற கோஷங்களை எழுப்பியவாறு பேரணியை முன்னெடுத்தனர்.




விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கொழும்பின் உண்மை முகம்

**விடயங்களை – உண்மைகளை – தனக்கேற்றவாறு மாற்றி அர்த்தம் கற்பிக்கும் இலங்கையின் போக்கு மீண்டும் ஒரு தடவை அம்பலமாகியிருக்கின்றது.**

**பிரிட்டனின் தெற்காசியா மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கான அமைச்சர் தாரிக் அஹமட் பிரபு கடந்த 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதிவரை கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார்.**

**அச்சமயம் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் கொழும்பு அரசின் மூத்த அதிகாரிகளை அவர் சந்தித்துப் பேசியிருந்தார்.**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனான அவரது சந்திப்பை அடுத்து ஜனாதிபதி செயலகம் விடுத்த செய்திக் குறிப்பில், இலங்கையின் மனித உரிமைகள் விவகாரங்கள், நிலைவரங்கள் ஏதோ போற்றுதலுக்குரிய அளவுக்கு மேம்பட்டிருக்கின்றன எனக் குறிப்பிட்டு அது தொடர்பில் பிரிட்டன், கொழும்பு ஆட்சிப் பீடத்தை மெச்சி, சிலாகித்தது என்ற சாரப்படத் தெரிவிக்கப்பட்டிருந்தது.**

**அந்தச் செய்திக் குறிப்பைப் பார்த்த இராஜதந்திரிகள், அவதானிகள் பலரும் அதிர்ச்சி தெரிவித்தனர்.**

**இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை குறித்து சர்வதேச நீதி நியமங்களுக்கு அமைய பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலை நாட்ட மறுத்து நிற்கையில், மனித உரிமைகள் இங்கு மேம்பட்டு விட்டன எனக் கூறுகின்றமை அர்த்தமற்றது என்பதே உண்மையாகும்.**

**இழைக்கப்பட்ட மனித உரிமை மீறலுக்கு நீதி வழங்க மறுத்து, காலத்தை இழுத்தடித்தால் அந்த இழுத்தடிக்கப்படும் காலம் வரையில் அந்த மனித உரிமை மீறல் நீடிப்பதாகவே அர்த்தம்.**

**ஆகவே, இலங்கையின் இறுதி யுத்தக் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நீதி, நியாயமான விசாரணைகளுக்கு கொழும்பு மறுத்து நிற்கையில், இங்கு மனித உரிமைகள் நிலைமை மேம்பட்டுவிட்டதாகக் கூற முடியாது என்பதுதான் உண்மை.**

**அதுவும் இந்த விடயங்களுக்காகக் கொழும்புக்குக் கிடுக்குப் பிடி போட்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கச் செய்யும் சர்வதேச முயற்சி ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் மன்றில் முன்னெடுக்கப்படுகின்றது.**

**அந்த முயற்சியை சர்வதேச நாடுகளின் சார்பில் பிரிட்டனே தலைமை வகித்து மேற்கொள்கையில்,**

**பிரிட்டனின் சார்பில் அந்த நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து நேரடியாக வழிகாட்டும் தாரிக் அஹமட் பிரபுவே இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரத்தை மெச்சினர் என்று தன்பாட்டில் கொழும்பு செய்திக் குறிப்பில் வெளியிட்டமை மிக அபத்தமான விடயமாகும்.**

**இவ்விடயத்தில் நிலைமையைத் தெளிவுபடுத்துமாற்போல பிரிட்டனின் வெளிவிவகாரம், பொதுநலவாயம் மற்றும் அபிவிருத்தி அலுவலக அமைச்சர் அமண்டா மில்லிங் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.**

**கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர் இலங்கையின் படையினர் மற்றும் பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் தொடர்பாக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் வெளியிட்ட அறிக்கையை மிக சீரியஸான ஒன்றாகப் பிரிட்டன் கருதுகின்றது. இது தொடர்பில் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பிரிட்டனின் தெற்காசிய விவகார அமைச்சர் தாரிக் அஹமட் பிரபு அங்கு இலங்கை ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் மற்றும் மூத்த அதிகாரிகளிடம் தாம் சந்தித்த போதெல்லாம் பிரிட்டனின் கடுமையான சிரத்தையைத் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டினார் – என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.**

**ஆக இலங்கை வந்திருந்த பிரிட்டிஷ் அமைச்சரிடம் வாங்கிக் கட்டிக் கொண்டு, அதை மூடி மறைத்து, பாராட்டுக் கிடைத்ததாக கொழும்பு அறிவித்தமை இப்போது அம்பலமாகியிருக்கின்றது.**

# வரலாறு முழுவதும் சுதந்திரத்தை அடைவதற்கு இலங்கையர் நாம் பல தியாகங்களை செய்தோம்!

## வாழ்த்துச் செய்தியில் பிரதமர் மஹிந்தர்



வரலாறு முழுவதும் சுதந்திரத்தை அடைவதற்கு இலங்கையர்களாகிய நாம் பல தியாகங்களை செய்துள்ளோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தினை முன்னிட்டு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில் கூறியதாவது –

’இலங்கையர்களால் பெருமிதத்துடன் கொண்டாடப்படும் 74 ஆவது தேசிய சுதந்திர தினம் உதயமாகியுள்ளது.

வரலாறு முழுவதும் சுதந்திரத்தை அடைவதற்கு இலங்கையர்களாகிய நாம் பல தியாகங்களை செய்துள்ளோம்.

ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெறுவதற்கான இத்தகைய போராட்டங்கள் இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் மத ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன.

ஒரு துளியேனும் இரத்தம் சிந்தாமல் காலனித்துவ சுதந்திரத்தை அடைந்தமை இன, மத, கட்சி பேதமின்றி சிங்கள, தமிழ், முஸ்லிம், பர்கர் என அனைத்துத் தலைவர்களின் ஒன்றுபட்ட போராட்டத்தின் விளைவாகும்.

74 வருடங்களுக்கு முன்னர் கிடைத்த அந்த சுதந்திரத்தின் உண்மையான உத்வேகம் உள்நாட்டுப் போராட்டங்களாலும், மூன்று தசாப்த கால பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தாலும் இந்நாட்டு மக்களுக்கு இல்லாமல் போனது.

போர்வீரர்களின் ஈடு இணையற்ற துணிச்சலுக்கும் அர்ப்பணிப்பிற்கும் தலைமைத்துவம் வழங்கி இத்தால் 13 வருடங்களுக்கு முன்னர் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து மக்களுக்கு அச்சம் இல்லாத நாட்டுக்கு மீண்டும் உரிமைக் கொள்ள முடிந்தது.

அந்த சுதந்திரம் மீண்டும் சவாலுக்கு உட்பட்ட நிலையில் நாட்டின் ஆட்சியை மீண்டும் பொறுப்பேற்று நாட்டின் பாதுகாப்பை உறுதிபடுத்திய நாம் உலகளாவிய தொற்று நோய்க்கு மத்தியில் வீழ்ச்சியடைந்த மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் மாபெரும் இலக்கை நோக்கி பயணித்து வருகிறோம்.

இந்த அழிவுகரமான தொற்று நோயிலிருந்து உயிர்களைக் காப்பாற்றுவதற்கான அரசாங்கத்தின் தடுப்பூசி ஏற்றும் திட்டம் இப்போது உலக அளவில் பாராட்டப்பட் டிருப்பது ஒரு நாடாக நம் அனைவருக்கும் ஒரு பெரிய சாதனையாகும்.

சவால்களுக்கு மத்தியில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தருணமிது. ஒருவரையொருவர் மதித்து, மற்றவரின் இருப்புக்கு இடையூறாக இல்லாத சமூக மாற்றத்தின் மூலம் சுதந்திரத்தின் அர்த்தத்தை விரிவுபடுத்த முடியும் என்பது எனது நம்பிக்கை.

இந்த தேசிய சுதந்திரதினத்தில், எமது தாய்நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்காக தம் இன்னுயிர்களை தியாகம் செய்து மகத்தான தியா கங்களை செய்த அனைத்து மாவீரர்களையும் நாம் மரியாதையுடன் நினைவு கூர்வோம். சவால்களை முறியடித்து நாளைய விடியலுக்காக சுபீட்சமான நாட்டை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடற்படையினருக்கு பதவிகள் உயர்வு!



74 ஆவது தேசிய சுதந்திரதினத்தை முன்னிட்டு விமானப் படையை சேர்ந்த 175 அதிகாரிகளுக்கும் மற்றும் 2 ஆயிரத்து 338 சிப்பாய்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலை உயர்வுகள் தேசிய சுதந்திரதினமான இன்று முதல் அமுலுக்கு வருகின்றது என விமானப்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

# மாவைக்கு கொவிட்!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசு கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜாவிற்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அண்மைய நாள்களில் தன்னுடன் நெருங்கிப் பழகியவர்களை அவதானத்துடன் செயற்படுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பிறந்து 2 நாள்களேயான குழந்தைக்குக் கொவிட்!

யாழ். மாவட்டத்தில் பிறந்து 2 நாள்களேயான பெண் குழந்தைக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாணத் தில் 24 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஐ.எஸ் மூத்த தலைவர் கொல்லப்பட்டார் என பைடன் அறிவிப்பு



வடமேற்கு சிரியாவில் அமெரிக்க சிறப்புப் படைகள் நேற்றுமுன் தினம் இரவு முழுவதும் நடத்திய தாக்குதலில் இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) என தங்களை அழைத்துக் கொள்ளும் குழுவின் மூத்த தலைவர் கொல்லப்பட்டார் என அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அபு இப்ராஹிம் அல்-ஹாஷிமி அல்-குரேஷியின் மரணத்தின் மூலம் உலகின் முன்னிருந்த ஒரு பெரிய பயங்கரவாத அச்சுறுத்தல் நீங்கியுள்ளது, என்று அதிபர் பைடன் கூறியுள்ளார்.

அமெரிக்க படையினரின் ராணுவ நடவடிக்கையின் கடைசி கட்டத்தில், குரேஷி ஒரு வெடிகுண்டை வெடிக்கச் செய்து தன்னையும் தனது சொந்த குடும்ப உறுப்பினர்களின் உயிரையும் மாய்த்துக் கொண்ட செயல், கோழைத்தன விரக்தியின் அடையாளம், என்று பைடன் தெரிவித்தார்.

தாக்குதலுக்குப் பிறகு சம்பவ பகுதியில் 13 பேரின் உடல்கள் கிடைத்தன என சிரியாவின் மீட்புக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்காவின்இந்த ராணுவநடவடிக்கையானது, வடக்கு இட்லிப் மாகாணம் மற்றும் துருக்கியின் எல்லைக்கு அருகே உள்ள எதிர்கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள அட்மேஹ் நகரின் புறநகரில் உள்ள இரண்டு மாடி குடியிருப்பு கட்டடத்தை இலக்கு வைத்து நடந்தது.

இப்பகுதி ஜிஹாதி குழுக்கள் மற்றும் ஐ.எஸ் குழுவுக்கு எதிரான துருக்கிய ஆதரவு கிளர்ச்சிப் பிரிவுகளின் கோட்டையாக கருதப்படுகிறது.

கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ராணுவ ரீதியாக இங்கிருந்த ஜிஹாதி குழுக்கள் வீழ்த்தப்பட்டிருந்தாலும், பின்னர் அவை படிப்படியாக எழுச்சி பெற்று வந்தன.

அப்துல்லா கர்தாஷ் மற்றும் ஹஜ்ஜி அப்துல்லா என்றும் அழைக்கப்படும் குரேஷியைப் பிடிக்க அல்லது கொல்லும் நடவடிக்கை குறித்து அதிபர் பைடனுக்கு ஒரு மாதத்திற்கு முன்பே அமெரிக்க ராணுவ தளபதிகள் விவரித்திருந்தனர் என்று அதன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

குரேஷி தனது குடும்பத்துடன் அட்மேயில் உள்ள குடியிருப்பு கட்டடத்தின் இரண்டாவது மாடியில் வசித்து வந்தார் எனவும், அவர் ஒரு போதும் வெளியில் செல்வதில்லை என்றும், அதற்கு பதிலாக கூரியர்களை பயன்படுத்தி சிரியா மற்றும் பிற இடங்களில் உள்ள ஐ.எஸ் குழுக்களுக்கு தகவல் பரிமாற்றம் செய்து வந்தார் எனவும் உளவுத்துறை தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இத்தனைக்கும் இதே கட்டடத்தில் ஐ.எஸ் குழுவுடன் தொடர்பில்லாத அல்லது குரேஷியின் இருப்பை அறியாத மற்றொரு குடும்பம் தரை தளத்தில் வசித்து வந்தது.

இந்த நிலையில், குரேஷியை இலக்கு வைக்கும் ராணுவ நடவடிக்கைக்கு கடந்த செவ்வாய்க்கிழமை ஜோ பைடன் அனுமதி அளித்தார். இதையடுத்து புதன், வியாழனுக்கு இடைப்பட்ட நள்ளிரவில் (புதன்கிழமை 22:00) பல ஹெலிகாப்டர்கள் அட்மேக்கு வந்தன. அங்கிருந்தபடி வெள்ளை மாளிகையின் போர்ச்சூழல் கண்காணிப்பு அறையில் இருந்தபடி குரேஷி தாக்குதல் நடவடிக்கையை நேரலையில் அதிபர் கண்காணித்தார்.

அமெரிக்க சிறப்புப் படைகள் தரையில் ஐஎஸ் ஆயுததாரிகளின் கடுமையான எதிர்ப்பை எதிர் கொண்டதாகவும், வாகனங்களில் பொருத்தப்பட்ட விமான எதிர்ப்பு துப்பாக்கிகளால் அவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்எனவும்உள்ளூர் வட்டாரங்கள்தெரிவித்தன.

ஹெலிகாப்டர்கள் புறப்படுவதற்கு இரண்டு மணி நேரம் முன்புவரை தொடர் துப்பாக்கிச் சூடு மற்றும் ஷெல் குண்டு சத்தம் கேட்டதாக உள்ளூர் வட்டாரங்கள் கூறின.

இந்த ராணுவ நடவடிக்கையின் தொடக்கத்தில் தரை தளத்தில் வசிக்கும் குடும்பத்தில் இருந்த ஒரு பெண், ஒரு ஆண் மற்றும் பல குழந்தைகள் - பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இருப்பினும், குரேஷி ஒரு குண்டை வெடிக்கச் செய்தார் என்றும் அது அவரையும் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட அவரது சொந்த குடும்ப உறுப்பினர்களையும் கொன்றது என்றும் ஒரு அதிகாரியை மேற்கோள்காட்டி ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கையின் முடிவுகளை நாங்கள் இன்னும் மதிப்பிடும்போது, அல்-பாக்தாதியை அழித்த 2019ஆம் ஆண்டு நடவடிக்கையில் நாங்கள் பார்த்த அதே கோழைத்தனமான பயங்கரவாத தந்திரமாக இது தோன்றுகிறது, என்று அந்த அதிகாரி ராய்ட்டர்ஸிடம் கூறியுள்ளார்.

குரேஷியின் முன்னோடியான அபு பக்கர் அல்-பாக்தாதி, அட்மேவிலிருந்து 16 கிமீ (10 மைல்) தொலைவில் உள்ள ஒரு மறைவிடத்தில் இருந்தபோது அவரை பிடிக்க அமெரிக்க சிறப்புப் படைகள் நடத்திய சோதனையின் போது அவரும் ஒரு வெடிகுண்டை வெடிக்கச் செய்து தன்னையும் மூன்று குழந்தைகளையும் கொன்றார் என அமெரிக்கா கூறியது.

குரேஷியின் கூட்டாளி ஒருவர் தனது சொந்த குடும்ப உறுப்பினர்களுடன் முதல் மாடியில் மறைந்திருந்தார் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்த ஆயுததாரியும் அவரது மனைவியும் சாகும்வரை அமெரிக்க துருப்புக்களுடன் சண்டையிட்டனர். பின்னர், கட்டடத்தில் இருந்து ஏராளமான குழந்தைகள் வெளியே வந்து பத்திரமாக வெளியேற்றப்பட்டனர்.

அதிகாரிகளின் கூற்றுப்படி, வேறொரு இடத்தில் இருந்து கொண்டு ராணுவ ஹெலிகாப்டர் ஒன்றில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களில் குறைந்தது இரண்டு பேரும் அந்த நடவடிக்கையில் கொல்லப்பட்டனர்.

கடந்த வியாழன் காலையில் குடியிருப்பு கட்டடத்தை பார்வையிட்ட ஏஎஃப்பி செய்தி நிறுவன நிருபர் ஒருவர், இரத்தம் தெறித்த சுவர்கள், கருகிய கூரைகள் மற்றும் ஒரு பகுதி இடிந்து விழுந்த கூரையுடன் - கடுமையான போரின் வடுக்களை கட்டடம் தாங்கியது என கூறினார்.

சிரியா சிவில் டிஃபென்ஸ் என்று அழைக்கப்படும் ஒயிட் ஹெல்மெட்ஸ் மீட்புக்குழுவினர், சரியாக காலை 03:15 மணிக்கு கட்டடத்தை அடைந்து ஆறு குழந்தைகள் மற்றும் நான்கு பெண்கள் உட்பட 13 பேரின் உடல்களை மீட்டதாகத் தெரிய வந்துள்ளது.

காயமடைந்த ஒரு பெண்ணையும் மீட்புக் குழுவினர் கண்டுபிடித்தனர், அவரது மற்ற குடும்ப உறுப்பினர்கள் அங்கு நடந்த தாக்குதலில் கொல்லப்பட்டனர்என ஒயிட் ஹெல்மெட்ஸ்அமைப்பு கூறியது.

என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக மோதலின் போது கட்டடத்தை நெருங்கியபோது காயமடைந்த ஒருவரும் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

பிரிட்டனை தலைமையிடமாகக் கொண்ட கண்காணிப்புக் குழுவான மனித உரிமைகளுக்கான சிரியன் அப்சர்வேட்டரி அமைப்பு, இறந்தவர்களின் எண்ணிக்கை 13 என்று கூறியது. அதில் நான்கு பேர் குழந்தைகள் மற்றும் மூன்று பேர் பெண்கள் என்றும் அந்த அமைப்பு தெரிவித்தது.

# ருமேனியாவுக்குத் தனது படைகளை அனுப்பும் பிரான்ஸ்



ருமேனியாவிற்கு துருப்புக்களை அனுப்புவதற்கான முன்மொழிவு ரஷ்யாவுக்கு ஓர் ஆத்திர மூட்டும் செயல் அல்ல என்று பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் கூறுகிறார்

நேட்டோவின் கிழக்குப் பகுதியில் தனது படைகளை வலுப்படுத்துவதற்கான பரந்த திட்டங்களின் ஒரு பகுதியாக ருமேனியாவிற்கு பிரான்ஸ் துருப்புக்களை அனுப்ப பிரான்ஸ் முன்வந்துள்ளது. இது ரஷ்யாவைத் தூண்டிவிடுவதற்காக அல்லஎன்றுபிரஞ்சுவெளியுறவு அமைச்சர் Jean-Yves Le Drian கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

புக்கரெஸ்டில் கிழக்கு ஐரோப்பா மற்றும் பால்டிக் நாடுகளின் வெளியுறவு மந்திரிகளை சந்தித்த பின்னர் பேசிய Le Drian மற்றும் அவரது ருமேனிய பிரதிநிதி Bogdan Aurescu இருவரும் ரஷ்யாவை விரிவாக்குவதற்கு பதிலாக பேச்சுவார்த்தையை தேர்ந்தெடுக்க ரஷ்யாவை சமாதானப்படுத்த அனைத்தையும் செய்து வருகிறது எனக் கூறினார். கிழக்கு ஐரோப்பாவில் கூடுதல் அமெரிக்க துருப்புக்கள் அனுப்பப்படுவது பிராந்தியத்தில் பதற்றங்களை அதிகரித்து வருகிறது. போலந்து மற்றும் ருமேனியாவிற்கு 3ஆயிரம் கூடுதல் துருப்புக்களை அனுப்புவதாக வாஷிங்டன் கூறியதை அடுத்து கிரெம்ளின் வியாழக்கிழமை கூறியது

# கொரோனாக் கட்டுப்பாட்டுகளை தளர்த்தியது டென்மார்க்!

ஐரோப்பிய நாடுகளில் முதல் முறையாக கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து கட்டுப்பாட்டுகளையும் டென்மார்க் விலக்கிக் கொண்டுள்ளது.

கடந்த வாரங்களில் தினசரி கொரோனாத் தொற்று 50 ஆயிரத்தைக் கடந்ததுள்ளது.

எனினும், புதிய வகை ஒமிக்ரோன் வகை கொரோனாவால் நோயாளிகளின் உடல்நிலை அதிக அளவில் மோசமடையவில்லை. எனவே, வைத்தியசாலைகளில் பணிச் சுமையும் அதிகரிக்கவில்லை.

எனவே, கொரோனாத் தொற்றை இனியும் சமூக அச்சுறுத்தல் நிறைந்த நோயாகக் கருதத் தேவையில்லை என டென்மார்க் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து, நோய் பரவல் கட்டுப்பாட்டு விதிமுறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# பல்கலைக்கழகங்களை திறக்க அனுமதித்தது தலிபான்

ஆப்கானிஸ்தானில் பல் கலைக்கழகங்கள் திறக்கப்பட்டுள்ள நிலையில், மாணவர்களும், மாணவிகளும் ஒருவரை ஒருவர் சந்திக்காத வண்ணம் தனித்தனி வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானை மீண்டும் கைப்பற்றிய தாலிபான்கள், இதுவரை பெண்களின் உயர்கல்வி குறித்து எந்த ஒரு அறிவிப்பும் வெளியிடவில்லை. இந்நிலையில், அந்நாட்டில் உள்ள வெப்பமான மாகாணங்களில் பல மாதங்களுக்கு பின் திறக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களில் வெவ்வேறு நுழைவாயில் வழியாக மாணவர்களும், மாணவிகளும் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்கள் தனித்தனி வகுப்பறைகளில் அமரவைக்கப்பட்டதுடன், வகுப்பு நேரங்களும் சுழற்சி முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

# இந்தியாவில் கொரோனா பலி எண்ணிக்கை ஐந்து லட்சத்தைக் கடந்துள்ளது என தகவல்



உலக அளவில் கொரோனாவால் இதுவரை 38 கோடியே 82 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்படைந்துள்ளனர். இதில் 57 லட்சத்து 30 ஆயிரம் பேர் இறந்துள்ளனர் என்று தரவுகள் கூறுகின்றன.

கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட அமெரிக்காவில் இதுவரை 7 கோடியே 71 லட்சம் பேர் தொற்றுப் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களில் 9.20 லட்சம் பேர் இறந்துள்ளனர். பாதிப்பில் 3 ஆம் இடத்தில் உள்ள பிரேஸிலில் இதுவரை 2.60 கோடி பேருக்கு தொற்று உறுதியாகி இருக்கிறது. அங்கு இதுவரை 6.30 லட்சம் பேர் பலியாகியிருக்கிறார்கள். இதனால் அதிக பலி எண்ணிக்கை கொண்ட நாடுகளில் பிரேஸில் 2ஆவது இடத்தில் உள்ளது. இந்தியாவில் பாதிப்பு 4 கோடியே 19 லட்சத்தை கடந்துள்ள நிலையில், மொத்த பலி எண்ணிக்கை 5 லட்சத்தைக் கடந்துள்ளது. கடந்த 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியாவில் கொரோனா முதல் பலி ஏற்பட்டது. 204 நாள்கள் கழித்து ஒக்ரோபர் தொடக்கத்தில் பலி எண்ணிக்கை 1 லட்சத் தைக் கடந்தது. அதன்பின், 207 நாள்களுக்கு பிறகு 2021 ஏப்ரல் இறுதியில் பலி எண்ணிக்கை 2 லட்சத்தை தாண்டியது.

இரண்டாம் அலையின் கோர தாண்டவம் காரணமாக அடுத்த 26 நாள்களில் 1 லட்சம் பேர் இறந்தனர். இதனால் மே 23 ஆம் திகதி நிலைவரப்படி பலி எண்ணிக்கை 3 லட்சத்தை கடந்திருந்தது. அடுத்த 39 நாள்களில் மேலும் 1 லட்சம் பேர் இறந்தனர். இதனால் ஜூலை முதலாம் திகதி நிலைவரப்படி பலி எண்ணிக்கை 4 லட்சத்தைத் தாண்டியது. அதன் பின்னராக, இப்போது 217 நாள்களுக்கு பிறகு தற்போது பலி எண்ணிக்கை 5 லட்சத்தைக் கடந்துள்ளது.

முதல் அலையில் மொத்தமாக 1.55 லட்சம் பேர் பலியாகியிருந்தனர். 2 ஆவது அலையில் மட்டும் 3.24 லட்சம் பேர் இறந்தனர். தற்போது 3ஆவது அலையில் இதுவரை11,600பேர்வரைமட்டுமேபலியாகியுள்ளனர். முதல் இரண்டு அலைகளைவிட 3ஆவது அலையில் உயிரிழப்புகள் குறைவாக இருக்கின்றமை புள்ளி விவரங்களில் தெரியவந்துள்ளது.

# சீன குளிர்கால ஒலிம்பிக் நிகழ்வினை தூதரக ரீதியாக புறக்கணித்தது இந்தியா




சீனாவில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக்கை தூதரக ரீதியாக இந்தியா புறக்கணிப்பதாக அறிவித்துள்ளது.

சீனாவில் மனித உரிமை மீறல்கள் அதிகம் நடைபெறுவதாக முறைப்பாடு எழுந்த நிலையில், பாலியல்முறைப்பாட்டில்டென்னிஸ்வீராங்கனை மிரட்டப்பட்ட சம்பவமும் உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்தநிலையில், சீனத்தலைநகர் பீஜிங்கில் 24 ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

முன்னதாக, ஒலிம்பிக் ஜோதியை ஏந்திச் செல்லும் பொறுப்பு சீன இராணுவ வீரர் பாபிலோவுக்கு வழங்கப்பட்டது. இவர், 2020 ஆம் ஆண்டு கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய இராணுவ வீரர்களை கொன்ற சம்பவத்தில் தொடர்புடையவர் என்ற குற்றசாட்டு உள்ளது. எனவே, இவ்வாறான குற்றவாளி ஒருவருக்கு முதன்மைப் பொறுப்பை வழங்கியருக்கும் சீனாவின் செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சகம், குளிர்கால ஒலிம்பிக்கை தூதரக ரீதியாக புறக்கணிக்கப்போவதாக அறிவித்துள்ளது. மேலும், தொடக்க விழாவின் நேரலையையும் மத்திய அரசின் உத்தரவுப்படி தூர்தர்ன் தொலைக்காட்சி வலையமைப்பு ரத்துச் செய்துள்ளது.

ஏற்கெனவே, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் தூதரக ரீதியாக குளிர்கால ஒலிம்பிக்கை புறக்கணித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



# தி.மு.க. உருவாக்கிய நீட் நாடகம் முடிவுக்கு வந்துள்ளது – அண்ணாமலை

சென்னை தி.நகரில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்திய தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலைதி.மு.க. உருவாக்கிய நீட் நாடக முடிவுக்கு வந்துள்ளது, என்று தெரிவித்துள்ளார்.

இன்றைய ஊடகச் சந்திப்பில் பேசியஅவர்,நீட்பிரேரணையை திருப்பி அனுப்பியதற்கான காரணத்தை அரசுக்கு ஆளுநர் தனியே அனுப்பியிருக்கிறார். இதை இதுவரை தமிழக அரசு வெளியிடவில்லை. நீட் விவகாரத்தில் பா.ஜ.க. மீது எதிர்க்கட்சிகள் பொய்ப் பிரசாரம் மேற்கொண்டு வருகின்றன. அ.தி.மு.க. அரசு அனுப்பிய நீட் விலக்கு பிரேரணையையும் முன்னர் ஜனாதிபதி நிராகரித்திருந்தார் .

நீட் தேர்வால் கிராமப்புற, ஏழை மாணவர்களின் வைத்தியராகும் கனவு பாதிக்கப்படவில்லை. எதன் அடிப்படையில் நீட் தேர்வு சமூக நீதிக்கு எதிரானது என சொல்லப்படுகிறது? மருத்துவப் படிப்பில் தமிழ்நாட்டுக்கான ஒதுக்கீட்டினையும் மத்திய அரசு அதிகரித்துள்ளது.

பிரேரணையை ஆளுநர் திருப்பி அனுப்பியதால் தி.மு.க. உருவாக்கிய நீட் நாடகம் முடிவுக்கு வந்துள்ளது. ஒரே நாடு ஒரே தேர்தல் என்பதை நோக்கி நகர்ந்து சென்று கொண்டிருக்கிறோம், என்று தெரிவித்துள்ளார்.

# ராஜா வேடமணிந்து வேட்புமனுத் தாக்கல் கோவையில் சுயேச்சை வேட்பாளரால் பரபரப்பு

கோயம்புத்தூரில் சுயேச்சை வேட்பாளர் ஒருவர் ராஜா வேடமணிந்து வேட்புமனுத் தாக்கல் செய்ய வந்தமையால் பரபரப்பு ஏற்பட்டது.

கோவை சுந்தராபுரம் பகுதியைச் சேர்ந்தவரான நூர் முகம்மது சட்டமன்றம், நாடாளுமன்றம் மற்றும் உள்ளாட்சிச் தேர்தல் உள்ளிட்ட தேர்தல்களில் 37 முறை போட்டியிட்டுள்ளார்.

இந்தநிலையில், தற்போது உள்ளாட்சித் தேர்தலில், 38 ஆவது முறையாக சுந்தராபுரம் 94 ஆவது வார்டில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

இதற்காக இவர் ராஜா வேடமணிந்து சிப்பாய் வேடமிட்டவர்களுடன் தள்ளுவண்டியில் அமர்ந்து தெற்கு மண்டல அலுவலகத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்ய வந்திருந்தார்.

திரைப்படக் காட்சி போன்ற இந்த நடவடிக்கையை அங்கிருந்த பொதுமக்கள் ஆச்சரியத்துடன் பார்த்ததோடு, புகைப்படம், காணொலிகளையும் எடுத்தனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.



# தமிழகத்தில் உள்ள மதுபானசாலைகளை மூட சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

தமிழகத்தில் உள்ள அனைத்து மதுக்கடைகளுடனும் இணைக்கப்பட்டுள்ள மதுபானசாலைகள் மூட வேண்டுமென சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மதுபானசாலை உரிமம் வழங்கும் அதிகாரம் கலால் வரித்துறை ஆணையருக்கு மட்டுமே உள்ளது என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.

மதுபான சாலைகளில் மதுபானங்களை விற்க மட்டுமே அனுமதி உள்ளது எனவும் மாறாக, மதுபானசாலை நிர்வாகம் நேரடியகவோ, மறைமுகமாகவோ மதுபான சாலைகள் நடத்த அனுமதியில்லை எனவும் உயர்நீதிமன்ற சரவணன் தெரி வித்துள்ளார். மதுபான சாலைகளின் அருகேயுள்ள இடங்களை மேம்படுத்தி, மதுபானசாலைகள் அமைக்கும் நடைமுறையை அனுமதிக்க முடியாது எனவும் நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மதுபான சாலைகள் உரிமம் வழங்குவது தொடர்பான விலை மனுக்கோரலை எதிர்த்துத் தாக்கல் செய்த மதுபான சாலைகள் நிர்வாகத்தின் வழக்கைத் தள்ளுபடி செய்து, தமிழகத்தில் உள்ள அனைத்து மதுபான சாலைகளையும் 6 மாத காலத்திற்குள் மூடவேண்டும் என சென்னை உயர்

# மரண சான்றிதழ் வழங்குவோம் என்ற வார்த்தையை பயன்படுத்துவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும்

## கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தெரிவிப்பு

இலங்கையின் 74ஆவது சுதந்திரதினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு இன்றைய நாள் ஒரு கறுப்பு நாள் எனவும் அரசாங்கம் இனிமேல் மரண சான்றிதழ் வழங்குவோம் என்ற வார்த்தை பிரயோகத்தை பயன்படுத்துவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும் எனவும் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை அன்புவெளிபுரம் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் அலுவலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊட கவியலாளர் சந்திப்பிலேயே சங்கத்தின் தலைவி ஜே.நாகேந்திரன் ஆஷா தெரிவித்தார்.

இன்று நாட்டின் 74 ஆவது சுதந்திரதினத்தினை வெகு விமர்சையாக கொண்டாடிக் கொண்டிருக்கும் ஆட்சியாளர்கள் நம் தமிழர்களுக்கான கறுப்பு நாள் எனவும் இத்தனை வருடங்கள் கடந்தும் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரரின் தரவுகள் சரியாக வழங்கப்படாமையையிட்டு கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவினர்கள் என்ற வகையில் இந்த நாட்டில் எமக்கு எந்த ஒரு சுதந்திரமும் இல்லை எனவும், தாங்கள் இன்று வரை நிம்மதியாக இந்த நாட்டில் வாழ வில்லை எனவும், அரசாங்கத்தின் அழுத்தங்களின் காரணமாக அரச புலனாய்வுத் துறையினர்களின் பல கேள்விகளுக்கு உள்ளாக்கப்பட்டு, பின் தொடரப்பட்டு மற்றும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றோம் எனவும் தெரிவித்து கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி இன்றைய நாள் இலங்கை வாழ் தமிழர்களின் கறுப்பு நாள் எனவும் தெரிவித்தார்.

மேலும் நாட்டின் ஜனாதிபதி உட்பட அனைத்து அரசியல் தலைமைகளும் அரச அதிகாரிகளும் இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தீர்க்கமான கருத்துக்களும் தெரிவிக்காத நிலையில் ஆண்டு தோறும் தரவுகள் மாத்திரம் பெற்ற வண்ணம் இருக்கின்றார்கள் எனவும் அவ்வாறு பெறப்பட்டத் தரவுகளுக்கு இதுவரை எந்த ஒரு தீர்வும் கிட்டாத நிலையில் நீதியமைச்சர் கடந்த சில நாள்களுக்கு முன்னர் வடக்கிற்கான விஜயத்தை மேற்கொண்டு அங்கு ஊடகங்களுக்கு காணாமல் ஆக்கப்பட்டோர்களுக்கான மரண சான்றிதழ்கள் வழங்குவதாக தெரிவித்த விடயத்தை இன்றைய சுதந்திர தினத்தில் தாம் வன்மையாக கண்டிக்கிறோம்.



தமது உறவுகளுக்கு நீதி விசாரணை இல்லாமல் எவ்வாறு மரண சான்றிதழ் வழங்க முடியும் எமக்கு மரண சான்றிதழ் தேவையில்லை எனவும் அவர்களுக்கான சரியான ஒரு நீதி மாத்திரமே வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தினார்.

ஜனாதிபதி கூறிய அதே வார்த்தையை மனப்பாடம் செய்துகொண்டு நீதியமைச்சர் மரண சான்றிதழ்கள் வழங்கப்படும் என்ற விடயத்தை கூறுகின்றமையை விட்டு விட்டு இவ்வாறு கையளிக்கப்பட்டு,கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் சரியான ஆய்வு களை மேற்கொண்டு எமக்கு சரியான நீதியை பெற்றுத்தர வேண்டும் எனவும் நீதி அமைச்சரிடம் கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்த கையளிக்கப்பட்டு,கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி, நீதியமைச்சரின் குடும்பத்தினரோ அல்லது உறவினர்களோ இவ்வாறு கடத்தப்பட்டு அவர்களுக்கு நீதி கிடைக்காத பட்சத்தில் மரண சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றால் அவர் ஏற்றுக்கொள் வாரா? என்று அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும் இன்றைய சுதந்திரதின நாளில் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்களது மரண சான்றிதழ்கள் வழங்கப்படும் என்ற வார்த்தையை இனிமேல் இந்த அரசாங்கம் பிரயோகிக்க வேண்டாம் எனவும் அதனை கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் என்ற வகையில் தாம் வன்மையாகக் கண்டிப்பார் எனவும் இதன்போது தெரிவித்தார்.

திருகோணமலை தமிழர் சமூகத்தின் இணைப்பாளர் ஆர். நிக்லஸ் தெரிவிக்கையில் –

அன்று 1948 ஆம் ஆண்டு வெள்ளையர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்ற இந்த நாடு இன்று இந்நாட்டில் வாழும் மக்களுக்கு எந்த ஒரு சுதந்திரமும் கிடைக்கவில்லை எனவும் நாட்டில் எமக்கு நடந்த அநீதிகளுக்கு ஜனநாயக முறையில் நீதி கேட்பது, பேச்சு சுதந்திரம், கருத்து சுதந்திரம் மற்றும் செயற்பாட்டு சுதந்திரமும் இல்லை என்றும், இவ்வாறு இருக்கையில் நாம் எவ்வாறு இன்றைய சுதந்திர தினத்தை கொண்டாடுவது நாட்டு மக்கள் என்ற வகையில் இவ்வாறான அநீதிகள் இழைக்கப்படாமல் இருந்தால் நாட்டின் அனைத்து மக்களும் ஒன்றாக இந்த சுதந்திரதினத்தை வெகுவிமர்சையாக கொண்டாடியிருக்கலாம் என அவர் தெரிவித்தார்

இன்றைய சுதந்திரத்தினத்தின் போது கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் அவர்களின் உறவுகளின் புகைப்படத்தை தமது மடிகளில் தாங்கியவாறு அமர்ந்து அமைதியான முறையில் தமது கவலையை வெளிப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சடலம் மீட்பு



மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள திராய்மடு முருகன் கோவிலுக்கு அருகில் உள்ள வீதிக்கு அண்மையில் ஆண் ஒருவர் உயிரிழந்த நிலையில் இன்று வெள்ளிக்கிழமை காலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனக் கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் உயிரிழந்த நிலையில் சடலம் ஒன்று இருப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார், ஆண் ஒருவரை உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்டனர். மோட்டார் சைக்கிள் ஒன்றையும் மீட்டுள்ளனர்.

சடலம் அடையாளம் காணப்படவில்லை எனவும் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கு நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றோம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் 74 ஆவது சுதந்திரதின நிகழ்வு



(கல்லடி நிருபர்)

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தின நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய கே. கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தமையுடன் தேசியக் கொடியையும் ஏற்றிவைத்தார்.

மாவட்ட செயலக உயரதிகாரிகள் உட்பட உத்தியோகத்தர்கள், பொலிஸ் உயரதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் அரச நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தேசியகொடி ஏற்றி தேசிய கீதம் இசைத்தலுடன் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

அரசாங்க அதிபரின் சுதந்திரதின உரையைத் தொடர்ந்து, இராஜாங்க அமைச்சரின் விசேட உரையும் இடம்பெற்றது.

தொடர்ந்து சிரேஷ்ட பிரஜையை கௌரவிக்கும் முகமாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் எஸ்.புண்ணியமூர்த்திக்குப் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையுடன், சுதந்திரதினத்தினை முன்னிட்டு மாவட்ட செயலக வளாகத்தில் பயன்தரும் மரக்கன்றுகள் அதிதிகளினால் நட்டு வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.





இலங்கையின் 74 ஆவது சுதந்திர தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை கிழக்கு மாகாண சபை வளாகத்தில் முதலமைச்சின் செயலாளர் திருமதி. ஆர்.யூ.ஜலீல் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது முதலமைச்சின் செயலாளர் திருமதி ஆர்.யூ. ஜலீல் தேசியக்கொடியை ஏற்றி வைப்பதையும், இந்த நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சின் செயலாளர்கள், உயரதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர்களை படங்களில் காணலாம்.

(படங்கள் - பைல் இஸ்மாயில்)

# யாழின் அனைத்து கிராமங்களுக்கும் அபிவிருத்தி என்கின்றார் அங்கஜன்!




நிதி அமைச்சால் முன்னெடுக்கப்படும் 2022 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் ஒரு லட்சம் வேலைத்திட்டத்தின் யாழ்.மாவட்டப் பணிகள் மாவட்டத்தின் 435 கிராமங்களிலும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதான நிகழ்வில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு இந்தத் திட்டத்தின் பணிகளை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

நிகழ்வில் உரையாற்றிய அவர் கூறியவை வருமாறு-

கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே தேசத்தின் நிலையான அபிவிருத்திக்கு அடிப்படை என்பதைக் கருத்தில் கொண்டு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்தின்படி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கண்காணிப்பில், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் வழிகாட்டுதலில், எமது அரசாங்கத்தால் ஒவ்வொரு கிராமங்களுக்கும் தலா 30 லட்சம்; ரூபா நிதி, 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராமங்களின் தேவைகள் கிராமத்துக்கு கிராமம் மாறுபடும் என்பதை உணர்ந்து, யாழ் . மாவட்டத்தின் அனைத்து கிராமங்களுக்கும் தன்னிறைவான அபிவிருத்தி கிடைக்க வேண்டும் என்னும் குறிக்கோளுடன் 18 நாள்கள், 216 மணித்தியாலங்கள், 3023 கிலோமீற்றர்கள் பயணித்து 15 பிரதேச செயலகப் பிரிவுகளின் 435 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் நேரடியாக விஜயம் செய்து, மக்களிடம் அவர்களின் நியாயமான தேவைபாடுகளைக் கேட்டறிந்து, மக்கள் முன்னிலையிலேயே மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் வேலைத் திட்டங்களைபரிந்துரைசெய்திருந்தோம்.

இதனூடாக கிராமத்தின் வாழ்வாதாரம், உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி என்பன எதிர்காலத்தில் வளர்ச்சிப் போக்கை எட்டவுள்ளன.

கிராமங்கள் வளர்ச்சியடைந்தால், மக்களின் பொருளாதாரம் மேம்படும், அதனூடாக மாவட்டமும் நாடும் பொருளாதார மீட்சியை பெற்றுக்கொள்ளும். வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் அபிவிருத்தியை ஆரம்பிக்கும் இந்நிகழ்வு நடைபெறும் சமகாலத்தில், எமது மீனவ சகோதரர்களின் வாழ்வாதாரப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அவர்களது நியாயமான கோரிக்கை தொடர்பாக உண்மையில் நாம் எல்லோரும் அக்கறை கொண்டுள்ளோம்.

கடல்வளத்தைப் பாதுகாப்பதோடு, கடற்றொழிலாளர்களின் உயிர்களையும், உரிமைகளையும் பாதுகாப்பது தொடர்பில் மாவட்ட மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையிலும், மாவட்ட ஒருங்கிணைப்பு தலைவர் என்ற அடிப்படையிலும் மிகுந்த கரிசனை கொண்டுள்ளேன்.

கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் இப்பிரச்சினை தொடர்பாகவும்,இம் மக்களின் நீண்டகால கோரிக்கை தொடர்பிலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின்;கவனத்துக்கு கொண்டுசெல்வேன். இதேவேளை, கடந்த ஜனவரி 31 ஆம் திகதி, யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த வெளியுறவு அமைச்சர் பேராசி ரியர் ஜி.எல். பீரிஸிடம் இந்த விடயம் தொடர்பான எம்மக்களின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருந்தேன்.

மேலும் உயிரிழந்த, தர்மகுமார் தணிகைமாறன், ஜோசெப் பிரேம்குமார் ஆகிய மீனவ சகோதரர்களின் வீட்டுக்குச் சென்று, அவர்களின் குடும்பத்தினர், பிள்ளைகள், சகோதர சகோதரிகளுடன் எனது துயரத்தைப் பகிர்ந்துகொண்டதோடு, அந்தக் குடும்பத்துக்கான வருமானத்தை உறுதிசெய்யும் வகையில், பிரதேச செயலகத்தினூடாக வாழ்வாதார உதவித்திட்டமொன்றை வழங்க ஏற்பாடு செய்யுமாறு, கிராம சேவையாளரிடமும், மருதங்கேணி பிரதேச செயலாளரிடமும் வலியுறுத்தியுள்ளேன் எனத் தெரிவித்தார்.

இந்தநிகழ்வில், மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன், பிரதேச செயலாளர் சுதர்சன் மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதேவேளை, ஒவ்வொரு கிராமங்களிலும் கிராம மட்ட உத்தியோதர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அதிகாரிகள், அங்கஜன் இராமநாதனின் பிரதிநிதிகள் ஆகியோரால் இந்தத் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

## சுதந்திரதினத்துக்கு கூகுள் வாழ்த்து!

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நிலையில்,இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கூகுள் நிறுவனம் இலங்கையின் தேசியக் கொடியைத் தனது அட்டை படத்தில் வெளியிட்டு தமது வாழ்த்துக்களைப் பகிர்ந்துள்ளது.

இதேவேளை, இலங்கையின் சுதந்திரதினத்தைமுன்னிட்டுகொழும்பு மற்றும் மேல் மாகாணத்தை உள்ளடக்கிய வகையில் விசேட பாதுகாப்புத் திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இதற்காக இலங்கை பொலிஸ், விசேட அதிரடிப்படையினர் மற்றும் முப்படையினரின் உதவியுடனும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாதுகாப்பு பிரிவினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

74 ஆவது சுதந்திர தின வைபவத்தை முன்னிட்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி 21 வீதிகளின் போக்குவரத்து நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அந்த பாதைகளுக்குரிய மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 74 ஆவது சுதந்திரதினப் பாதுகாப்புக்களில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸார்!

சுதந்திரதின நிகழ்வை முன்னிட்டு பாதுகாப்பு கடமைகளில் மூவாயிரத்திற்கும் அதிகமான பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

விசேட நடவடிக்கைக்கான செயலணி மற்றும் முப்படையினரின் ஒத்துழைப்பு பெறப்பட்டு பாதுகாப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமகாலத்தில் கொழும்பு நகர் உள்ளிட்ட மேல் மாகாணத்தை உள்ளடக்கும் வகையில் விசேட பாதுகாப்பு செயற் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 21 வீதிகள் போக்குவரத்துக்காக மட்டுப்படுத்தப்படும் என்றும் அதற்கான செயற்திட்டம் மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் முன்னெடுக்கப்படும் என்றும் மாற்றுப் பாதைகளை உபயோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் தாய் நாட்டுக்காக கஜபாகு கப்பலிலிருந்து 25 பீரங்கி வேட்டுக்கள் காலி முகத்திடலில் வைத்து தீர்க்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.



## வவுனியாவில் பழக்கடை திடீரென தீப்பற்றி எரிந்தது!

வவுனியாவில் திடீரென பழங்கடை ஒன்று தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்று இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது

வவுனியா, குருமன்காடு சாந்தி கிளினிக் அருகில் உள்ள பழக்கடை ஒன்றை அதன் உரிமையாளர் வியாபாரம் முடிந்து பூட்டி விட்டு சென்று சிறிது நேரத்தில் பழ வியாபார நிலையத்தில் தீ பிடித்து எரிந்துள்ளது.

பழ வியாபார நிலையம் தீ பிடித்து எரிவதை அவதானித்த அயலவர்கள் வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினர் மற்றும் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதுடன், வியாபார நிலைய உரிமையாளருக்கும் தெரியப்படுத்தியுள்ளனர். வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்த போதும் பழ வியாபார நிலையம் முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளதுடன், பழங்களும் தீயில் கருகியுள்ளன.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, அப்பகுதியில் மின்சாரம் நின்று சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின் வந்த போதே குறித்த வர்த்தக நிலையம் தீயில் எரிந்ததை அவதானிக்க முடிந்தது என அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.02.2022இல் வெளியிடப்பெற்றது.